

திருச்சி தெப்பக்குளம் தபால் நிலையம் அருகில் மாணவரணி தமிழ்நாடு மாணவர் இயக்க மற்றும் திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவர் அமைப்புகளின் சார்பில் மாணவரணி மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் முத்து வெங்கடேஷ், அசாருதீன் ஆகியோர் தலைமையில் இந்தியை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஸ்ரீநிதி சதீஷ்குமார், பிரகாஷ், ஹரிஹரன், கண்ணன், சாமிக்கண்ணு, மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், கீதா செந்தாமரைகண்ணன் , சந்திரசேகர், சிபிராஜ் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பினர்.

## கழகத் தலைவர் கட்டளைப்படி

# ‘வெல்வோம் இருநூறு’ எனும் வரலாற்று வெற்றிக்கு களத்திலும் தளத்திலும் போராடுவோம்!

### தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!



**சென்னை, பிப்.27-**

**தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் 24.02.25 அன்று சென்னை அன்பகம் அண்ணா அரங்கில் நடைபெற்ற மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-**

**தீர்மானம் 1**

தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்திட அன்றாடம் ஓயாது உழைத்து, தனது தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள், பல மாநிலங்களை மட்டுமின்றி, உலக நாடு களையும் ஈர்க்கின்ற வகையில் திறன் மிகு நிர்வாகத்தில் அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை வளர்ச்சி அடையச் செய்திருப்பதுடன், 2019 நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி, 2025 ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வரை கண்ட தேர்தல் களங்கள் அனைத்திலும் வெற்றி முத்திரையைப் பதித்து, தமிழ்நாடு மட்டுமின்றி அனைத்து மாநிலங்களின் உரிமைக்கான முதல் முழக்கத்தை முன்னெடுக்கும் ஜனநாயகப் போராளியாகவும் திகழும் திராவிட நாயகன்கழகத் தலைவர்மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் 720 நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்படு கிறது.

**தீர்மானம் 2**

75 ஆண்டுகால திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு, போராட்டம், தியாகம், சாதனைகள் இவற்றால் தமிழ்நாடு மிகச் சிறந்த மாநிலமாகத் திகழ்வதை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் வகையில் சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு, அரசியலில் நமக்கெதிரான இனப் பகைவர்களையும் அவர்களின் கைக்கூலிகளையும் கொள்கை ஆயுதத்தால் எதிர்கொண்டு விரட்டியடித்து வரும் கழகத்தின் இளந்தலைவர் துணை முதலமைச்சர் இளைஞரணிச் செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலில் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி தளத்திலும் களத்திலும் பணியாற்றும் என்ற உறுதியினை அளித்து, கழகத்திற்கும் திராவிட மாடல் அரசுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஓய்வின்றி செயலாற்றி வரும் இளந்தலைவர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 3**

தி.மு.கழகத்தின் துணை அமைப்புகளான சார்பு அணிகளைச் சார்ந்த உடன்பிறப்புகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் இளந்தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி ‘தலைவர் 72’ மாபெரும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை நடத்திய கழகத்தின் விளையாட்டு மேம்பாட்டு அணிக்குப் பாராட்டுகளைத் தெரிவித்து, ஆண்கள் அணிக்கான போட்டியில் இறுதி வரை சிறப்பாகவும் நேர்த்தியான கிரிக்கெட் வீரர்களுக்கு இணையாகவும் விளையாடி இரண்டாம் இடத்திற்கான கோப்பையையும், பெண்கள் அணிக்கானப் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தி முதலிடத்திற்கான வெற்றிக் கோப்பையையும் வென்ற தகவல் தொழில்நுட்ப அணியின் ஆண்பெண் கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 4**

தி.மு.க.வையும் நம் இளந்தலைவர் அவர்களையும் சீண்டிப் பார்க்க நினைத்த தமிழ்நாடு பா.ஜ.க.வின் தலைமை க்குப் பதிலடி கொடுக்கும் வகையில் #GetOutModi என்ற ஹேஷ்டேக்கை 1மில்லியனுக்கும் அதிகமான பதிவுகளுடன் உலக அளவில் ட்ரெண்ட் செய்து, அதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை கழகத்தின் அனைத்து அமைப்புகளுடனும் இணைந்து மேற்கொ ண்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கும், உலகத் தாய்மொழி நாளான பிப்ரவரி 21 அன்று தமிழ் வாழ்க என்ற ஹேஷ்டேக்கை தளத்திலும், அதற்கான சுவரொட்டி யைக் களத்திலும் ட்ரெண்ட் செய்த தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்தக் கூட்டம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 5**

‘வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு’ என்ற முழக்கத்துடன் 2024 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழக அணியை மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் கட்டளைக்கிணங்க, தகவல் தொழி ல்நுட்ப அணியின் கட்டமைப்பு வலிமையை கடைக்கோடி வாக்குச் சாவடி வரை பலப்படுத்தும் முயற்சியாக, கழக அணிகளிலேயே முதல் அணியாக பூத் ஒருங்கிணைப்பாளர்கள் (AC3) அறிவிப்பை கழகத்தின் ஆவணமாகத் திகழும் முரசொலியில் வெளியிடச் செய்த தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன், அவருடைய கட்டளைக்கிணங்க அனைத்து கழக மாவட்டங்களிலும் பூத் ஒருங்கிணைப்பாளர்களை (AC3) முழுமையாகப் பெற்று தமிழ்நாட்டில் உள்ள ஏறத்தாழ 65,000 பூத்களிலும் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்களை நியமிக்க இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 6**

கழகத்தலைவர் இளந்தலைவர் ஆகியோரின் கட்டளைகளை நிறைவேற்றும் வகையிலும், அரசியல் களத்தில் எதிரணியினரின் சூழ்ச்சிகளை முறியடித்திடவும் கழக மாவட்டங்களில் தொகுதி வாரியாக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு முழுமையான அளவில் சமூக வலைத்தளப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 7**

பேச்சாலும் எழுத்தாலும் மக்களிடம் சிந்தனையை விதைத்து, அரசியல் தெளிவை உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் மரபார்ந்த வழியில் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்டதொகுதிஒன்றியநகரபகுதிவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரில் பேச்சாற்றல் கொண்டவர்களைத் தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுத்து, அந்தப் பட்டியலை கழகத் தலைவர் அவர்களிடம் அவரது பிறந்தநாளில் வழங்குவதுடன், பேச்சாற்றல் மிக்க தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு உரிய பயிற்சி அளித்து கழக மேடைகள், தெருமனைப் பரப்புரை, விவாத அரங்குகள், கருத்தரங்குகள், யூடியூப், சோஷியல் மீடியா என அனைத்துத் தளங்களிலும் களமாடச் செய்வது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 8**

தலைவர்களுக்கு மட்டுமின்றி, தொண்டர்களுக்கும் தியாக வரலாறு கொண்ட இயக்கம் தி.மு.கழகம். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கழகத்தின் மூத்த முன்னோடிகளை தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் நேரில் சந்தித்து அவர்களின் கள அனுபவங்களைப் பதிவு செய்யும் கழக வேர்களைத் தேடி என்ற காணொலித் தொடர் தகவல் தொழில்நுட்ப அணியின் சமூக வலைத்தளப்பக்கங்களில் பதிவேற்றப்பட்டு, கழக வரலாறு இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம் 9**

தாய்மொழியைக் காத்திடவும், மாநில உரிமைகளை மீட்டிடவும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களும், இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்களும் எந்தவொரு கட்டளையிட்டாலும் அதனை உடனடியாக களத்திலும் தளத்திலும் நிறைவேற்றி டும் வகையில் தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து நிர்வாகிகளும் செயல்பட்டு, ‘வெல்வோம் இருநூறு’ என்ற வரலாற்று வெற்றிக்குத் துணை நிற்போம் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், ஆலோசகர்கள் கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவி. லெனின், மாநில துணைச் செயலாளர்கள் எஸ்.டி.இசை, சி.ஹெச்.சேகர், டாக்டர் தருண், அழகிரி சதாசிவம், நவீன், சுரேஷ், தமிழ்மாறன், இலக்குவன், தமிழ்மறை, கேசவன், சிவா, விஜயகதிரவன், மதுரை பாலா, பத்மபிரியா, ஸ்ரீதரன், பா.ச.பிரபு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம், வாரியங்காவல் ஊராட்சியைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளரும், முன்னாள் ஒன்றியகுழு உறுப்பினருமான டி.ஆர். பரமசிவம் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சி தோழர்கள் அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர், சா.சி.சிவசங்கர் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் க.தருமதுரை, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி ராஜேந்திரன்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்கள் கே.சி.லூயி கதிரவன்,மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர் .

தமிழக முதல்வரும் கழக தலைவரும், திராவிட நாயகன் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா!

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் கழக இருவண்ண கொடியேற்றி நல திட்ட உதவிகள் வழங்குதல்!



### திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமானஅன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் மார்ச் 1 கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கழக கொடி ஏற்றி, நலத்திட்ட உதவிகள், வழங்கி எழுச்சியாக கொண்டாடுவோம்.

| வ.எண் | பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் கழகம் | தலைமை /பகுதி / ஒன்றிய/ நகர/பேரூர் கழக செயலாளர்கள் | கொடியேற்றும் பகுதி / ஊராட்சிகள்/நகர/ பேரூர்/ வார்டுகள் | சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கொடியேற்றுபவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | மலைக்கோட்டை பகுதி | ஆர்.மோகன் | 10 (வட்டங்கள்) | ஆறு. சந்திரமோகன் மாநகர துணை செயலாளர், |
| 2. | மார்க்கெட் பகுதி | ஆர்.ஜி.பாபு | 08 (வட்டங்கள்) | ஆர். மணிமேகலை பொதுக்குழு உறுப்பினர், |
| 3. | பாலக்கரை பகுதி | டி..பி.எஸ்.எஸ்.ராஜ் முகமது | 10 (வட்டங்கள்) | வெ. சரோஜினி மாநகர துணை செயலாளர், |
| 4. | கலைஞர் நகர் பகுதி | ஜி.மணிவேல் | 10 (வட்டங்கள்) | பொன் செல்லையா, மாநகர துணை செயலாளர், |
| 5. | அரியமங்கலம் பகுதி | ஏ.எம்.ஜி.விஜய்குமார் | 08 (வட்டங்கள்) | கே.கே.கே. கார்த்திக் பொதுக்குழு உறுப்பினர், |
| 6. | பொன்மலை பகுதி | இ.எம்.தர்மராஜ் | 10 (வட்டங்கள்) | எம். தமிழ்ச்செல்வன், மாநகர பொருளாளர், |
| 7. | காட்டூர் பகுதி | ஓ. நீலமேகம் | 08 (வட்டங்கள்) | யு. ராஜேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர், |
| 8. | திருவெறும்பூர் பகுதி | எஸ். சிவக்குமார் | 08 (வட்டங்கள்) | பி. நூர்கான், மாநகர அவைத் தலைவர், |
| 9. | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | சி. செல்வராஜ் | 17 (ஊராட்சிகள்) | என். கோவிந்தராஜ், மாவட்ட அவைத்தலைவர் |
| 10. | மணப்பாறை ஒன்றியம் | சி. ராமசாமி | 14 (ஊராட்சிகள்) | லீலாவேலு, மாவட்ட துணை செயலாளர் |
| 11. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி | 11 (ஊராட்சிகள்) | ரா. மூக்கன், மாவட்ட துணை செயலாளர் |
| 12. | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | ஆர். ஸ்ரீரங்கன் | 09 (ஊராட்சிகள்) | வண்ணை அரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 13. | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | எம். பழனியாண்டி | 17 (ஊராட்சிகள்) | என். செந்தில் மாநில அணி செயலாளர் |
| 14. | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி. சின்னடைக்கன் | 15 (ஊராட்சிகள்) | பி.எம். சபியுல்லா, தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 15. | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ. இராஜேந்திரன் | 9 (ஊராட்சிகள்) | கே.கே. செல்வராஜ் பேரூராட்சி சேர்மன் |
| 16. | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | சி. கங்காதரன் | 09 (ஊராட்சிகள்) | இரா. குணசேகரன், மாவட்ட பொருளாளர் |
| 17. | மணப்பாறை நகரம் | மு.ம. செல்வம் | 27 (வட்டங்கள்) | த. திவ்யா துணை மேயர் |
| 18. | துவாக்குடி நகரம் | இ. காயாம்பு | 17 (வட்டங்கள்) | அ.த.த. செங்குட்டுவன், மாவட்ட துணை செயலாளர் |
| 19. | கூத்தைப்பார் பேரூர் | எம்.ஆர்.டி.பி.கே. தங்கவேல் | 11 (வார்டுகள்) | பி. ஜெய நிர்மலா மண்டல தலைவர் |
| 20. | பொன்னம்பட்டி பேரூர் | கே.ஏ. நாகராஜ் | 15 (வார்டுகள்) | வேங்கூர் வி. தனசேகரன், பொதுக்குழு உறுப்பினர் |

மேற்கண்ட இடங்களில் மாவட்ட கழகத்தின் சார்பாக வரும் பிரதிநிதிகள் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக அவர்களின் வருகையை உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகிகளை தொடர்பு கொண்டு விழாவை சிறப்பாக நடத்திடவும் அனைத்து நிலை கழக நிர்வாகிகளும் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொள்ளுமாறும் கேட்டு கொள்கின்றேன் .

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர்,
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம்!

### அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் திண்டுக்கல் லியோனி குழுவினர் பங்கேற்பு!

கரூர், பிப்.27-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரு மான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம் வரும் மார்ச் 2ம்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் கரூர் 80 அடி சாலையில் நடைபெறுகிறது.

கரூர் மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி தலைமை வகித்து பேசுகிறார் கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், வரவேற்புரை ஆற்றுகிறார்.

திராவிட மாடல் முதல்வரின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் கொள்கை வழி நிற்பதே மக்கள் நலத்திட்டங்களே என்ற தலைப்பில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி நடுவராக பட்டிமன்றத்தை நடத்துகிறார். பேராசிரியர் விஜய குமார், கடலூர் தணிகைவேலன், கவிஞர் இனியவன், டாக்டர் வேதநாயகி ஆகியோர் பேசுகின்றனர்.

எம்.எல்.ஏ.க்கள் இரா. மாணிக்கம், பிஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே. சி. பழனிச்சாமி( முன்னாள் எம்.பி.), நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணை செயலாளர் பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி. விஜயகுமார், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், துணைச் செயலாளர்கள் எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பால குருபரன், எம்.துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர் எஸ் . ராஜா, மத்திய மேற்கு பகுதி செயலாளர் ஆர் ஜோதிபாசு, மத்திய கழக பொறுப்பாளர் விஜிஎஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம் எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே. ரவிராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என். மணிகண்டன், த. கார்த்திக், சி. வளர்மதி, பி. முத்துக்குமாரசாமி, வி.கே. வேலுசாமி, எல். கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர கழக செயலாளர் நகர்மன்ற தலைவர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி .கருப்பண்ணன், விகேடி ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே.சாமிநாதன், சி. கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம்,

எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பிஏ.குமார், பேரூர் செயலாளர்கள் கே .அம்மையப்பன், கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம் முத்து, சி தங்கராஜ், பிஎஸ்.மணி,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு. எஸ். சக்திவேல், ஆர்.ஜி.சரவணமூர்த்தி, ஜிம்.எம்சிவா, கே நந்தினிதேவி, கே தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிர மணியன், தென்னிலைபாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ. அப்பாசாமி, எம்.ப்ரின்சி, சி . நவாஸ்கான் , மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி எஸ்மனோகர், எம்ஆர் எஸ்.சுரேஷ், பங்க் கேசுப்பிரமணி, விஆர். அண்ணாவேலு, அரசு வழக்கறிஞர் என் செந்தில்குமார், பள்ளபட்டி டி எம் பஷீர் அகமது, முன்னாள் எம்எல்ஏக்கள் பி. காமராஜ், எஸ் காமராஜ், மற்றும் இரா பிரபு, ஆர் ராமசாமி ஆர் கந்தசாமி கா.அன்பரசன்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏ. கனகராஜ், சிகே.ராஜா, எம். பாபு, ஜிவிஅருண்,யுவராஜ், மாநகர இளைஞரணி பி. பூபதி, வழக்கறிஞர்கள் இரா குடியரசு, பி. லட்சுமணன், டி .பிச்சை முத்து, டி .ராஜேஸ்வரி, டி நீலமேகம், கே எம் சாகுல் ஹமீது, என் பி ரமேஷ், எஸ். பாலசுப்பிரமணியன், மாநகர கழக நிர்வாகிகள் கே வி தங்கவேல், எம் பாண்டியன், கே எஸ் அறிவின்ஸ், எம் நிசா , அங்கு நா. பசுபதி, ஆர் வெங்கடேஷ் ,கே எம் பாலகிருஷ்ணன், பி. சண்முகம், கே ஆர் சுந்தர்ராஜன், ஏ ஆரோக்கிய ஜெயபால் ,பி. பழனிவேல், ஜி ஜீவரத்தினம், பி. சுப்பிரமணி, அகா.இளமுருகு, மாநகர, பகுதி ஒன்றிய நகர, பேரூர் கழக நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட துணை செயலாளர் பூவை ரமேஷ்பாபு நன்றியுரை கூறுகிறார். கரூர் மாவட்ட திமுக சார்பில் சிறப்பு பட்டிமன்றம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.